**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.77/2025**

**PW1**

| | | |
|---|---|---|
| **Name** | : | முரளிதரன் |
| **Father's Name** | : | சித்தன் |
| **Village** | : | |
| **Taluk/District** | : | வேலூர் |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.02.2026.
A1 to 5 present.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவண்ணாமலை நகர காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.07.2019 அன்று திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது பகல் 13.00 மணியளவில் நானும் தலைமைக்காவலர் குமார் , தலைமைக்காவலர் மஞ்சுநாதன், தலைமைக்காவலர் கோபி ஆகியோர் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்ற தடுப்பு சம்மந்தமாக வேலூர் - திருக்கோவிலூர் புறவழிச்சாலையில் ரோந்து பணியில் இருந்தபோது எடப்பாளையம் பைபாஸ் அருகே இருந்த டீ கடையின் பின்புறம் உள்ள வேப்பமரத்தடியில் இருசக்கர வாகனம் மற்றும் கையில் சிறு கத்திகளுடன் இருந்து நபர்களை பார்த்து நாங்கள் சென்றபோது அதில் இரண்டுநபர்கள் தப்பி ஓடிவிட்டனர். அங்கிருந்த மூவரை பிடித்து விசாரித்தபோது அவர்களில் அண்ணாமலை, ஈஸ்வர், கோகுல்சரத் என்று தெரிவித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் எதிரிகள் 1 முதல் 3 தான் அவர்கள். அங்கிருந்து தப்பிஓடிய நபர்கள் தற்போது நீதிமன்றத்தில் இருக்கும் எதிரிகள் 4 ,5 பாபுலால் மற்றும் ஆபாவானன். எதிரிகள் 1 முதல் 3வரைஉள்ளவர்களை விசாரித்தபோது ஜாலியாக செலவு செய்ய பணம் இல்லாததால் அந்த பக்கமாக செல்லும்

வழிப்போக்கர்களை மடக்கி வழிப்பறி செய்து அவரிடம் இருந்து பணம் பறிக்க திட்டம் தீட்டிக்கொண்டிருந்ததாகவும் சொன்னார்கள். பின்னர் அவர்களிடம் இருந்த சிறிய கத்தி 3 மற்றும் TN25M2778 என்ற சிகப்பு நிற இருசக்கர வாகனத்தையும் படிவம் 95 மூலம் கைப்பற்றினோம். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரண்டு பெரிய கத்திகளும், 1 சிறிய கத்தியும் தான் அன்று எதிரிகளிடம் இருந்து நாங்கள் கைப்பற்றியவை. அவை **அ.சா.பொ.1 முதல் 3**. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படங்கள்தான் நாங்கள் கைப்பற்றிய இருசக்கர வாகனத்தின் புகைப்படங்கள். அவை **அ.த.சா.ஆ.1**. (3 எண்ணிக்கை). தற்போது திருவண்ணாமலை ஆயுதப்படை மைதானத்தில் இருந்து காணொளி மூலம் காண்பிக்கப்படும் இருசக்கர வாகனம்தான் அன்று நாங்கள் கைப்பற்றியது. அது **அ.சா.பொ.4.** கைப்பற்றிய வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரிகளுடன் 14.30 மணிக்கு நிலையம் ஆஜராகி காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக நான் ஆய்வாளருக்கு புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு **அ.த.சா.ஆ.2**. வழக்கினை மேல் விசாரணைக்கு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.இது சம்மந்தமாக ஆய்வாளர் வழக்கு பதிவு செய்து மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இது போன்ற ரோந்து பணிகளில் நாங்கள் தினமும் செல்வோம். எப்போதும் பார்டிசகிதமாக செல்வோமா என்று கேட்டால் சில சமயங்களில் பார்டிசகிதமாகவும் சில சமயங்களில் தனித்தனியாகவும் செல்வோம். அவ்வாறு ரோந்து பணிக்கு செல்லும் போது நாட்குறிப்பில் எழுதிவிட்டு செல்வது வழக்கம் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றும் நாங்கள் ரோந்து பணிக்கு சென்றபோது பொது நாட்குறிப்பில் எழுதிவிட்டு சென்றோமா என்றால் எழுதவில்லை. வேலூர்- திருக்கோவிலூர் பைபாஸ் ரோடில் உள்ள ஏழுமலை டீக்கடை அருகே எப்போதும் போக்குவரத்து இருக்கும் என்று சொன்னால் அந்த சமயத்தில் சாலை அமைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருந்ததால் அதிக போக்குவரத்து கிடையாது. ஆஜர் எதிரிகள் 5 பேரும் ஒரே வண்டியில்தான் வந்தார்களா என்றால் அதைபற்றி அவர்கள் சொல்லவில்லை. ஆஜர் எதிரிகள் 5 பேரும் கையில் ஒரு கத்தியை வைத்திருந்தார்கள். குறியீடு செய்துள்ள சா.பொ.1 முதல் 3 வரையிலான கத்திகள் அனைத்தும் காவல் நிலையத்தில்

தயாரிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. 3 கத்திகளில் சிறிய கத்தியை எதிரி அண்ணாமலையிடம் என்பவரிடம் இருந்து கைப்பற்றப்பட்டது. மற்ற இரண்டு கத்திகளை எந்த எதிரிகளிடம் இருந்து கைப்பற்றினேன் என்று கேட்டால் எதிரிகளின் முகம் மறந்துவிட்டது. புகாரை காவல் நிலையத்தில்தான் தட்டச்சு செய்து கொடுத்தேன். நான் ஆய்வாளரிம் புகார் தெரிவித்த சமயத்தில் என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் புள்ளிவிவரத்திற்காக எதிரிகள் மீது ஒரு வழக்கு தொடுத்துள்ளேன் என்றும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.